**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொள்ளாச்சி.**

**முன்னிலை - E.பிரகாசம் B.A., B.L.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் .2., பொள்ளாச்சி**

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 209/2026**

குமார்(38/2026),

த/பெ. சுப்பிரமணி ............ மனுதாரர்/ எதிரி

//எதிராக//

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

பொள்ளாச்சி தாலுக்கா காவல் நிலைய குற்ற எண். 100/2026,

சட்டப்பிரிவு 296(b), 115(2), 351(3) BNS r/w 4 of TNPHW Act.

.............எதிர்மனுதாரர்/புகார்தாரர்

உத்தரவு

1) மனுதாரர்/எதிரியை பிணையில் விடக்கோரி மனுதாரர்/எதிரியால் பிரிவு 480 BNSS ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

2) மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்த மனுவில், மனுதாரர்/எதிரி மீது எதிர்மனுதாரரால் பொள்ளாச்சி மேற்கு காவல் நிலைய குற்ற எண் 100/2026 சட்டப்பிரிவு 296(b), 115(2), 351(3) BNS r/w 4 of TNPHW Act -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, மேற்படி மனுதாரர்/எதிரியை கடந்த 07.03.2026 ஆம் தேதி கைது செய்து மாண்பமை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/எதிரி தவறுதலாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர்/எதிரி இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடாதவர் என்றும், மனுதாரர்/எதிரி நிரந்தர வசிப்பிடம் உள்ளவர் மற்றும் தலைமறைவாகமாட்டார் என்றும், அவரை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை ஆஜர்படுத்தவும் தயாராக உள்ளார் என்றும், ஆதலால் மனுதாரரை பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது.

3)எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் பதில் உரை தாக்கல் செய்து ஆட்சேபனை செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், மேலும் எதிரி இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விட்டால் நீதிமன்றத்திற்கு ஆஜராகாமால் தலைமறைவாகிவிடுவார் என்றும், சாட்சிகளை

கலைத்து விடுவார் என்றும் தெரிவித்து எதிரியின் பிணை மனு மீது ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4) வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மேலும் மனுதாரர்/எதிரி 12 நாட்களாக நீதிமன்றக் காவலில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், மேலும் குற்றத்தின் தன்மை மற்ற சூழலைக் கருத்திற்கொண்டும், எதிரி மட்டுமே அவர் குடும்பத்தில் வருமானம் ஈட்டுபவர் என்பதை கருத்தில் கொண்டும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படாததாலும், எதிரியின் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் மனுதாரர்/ எதிரியை உரிய நிபந்தனையின் பேரில் பிணையில் விடுவது ஏற்புடையது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5) இறுதியாக இம்மனு பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

i) மனுதாரர்/எதிரி ரூ.10,000/- க்கான பிணைபத்திரம் தனக்காகவும், இரண்டு பிணையதாரர்களுடன் எழுதி கொடுக்கவேண்டும்.

ii) மனுதாரர்/எதிரி சிறையில் இருந்து வெளிவந்த பின்னர் தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் ஆஜராகி 15 நாட்களுக்கு கையெழுத்திட வேண்டும்.

iii)இந்நீதிமன்ற அனுமதியில்லாமல் வெளிநாடோ வேறு மாநிலமோ செல்லக்கூடாது.

iv) நீதிமன்ற சாட்சி விசாரணைக்கு அழைக்கும்போது தவறாமல் ஆஜராக வேண்டும்.

v) சாட்சிகளை கலைக்கவோ தலைமறைவாகவோ கூடாது.

இன்று 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 18 ஆம் நாள் இந்த உத்தரவு என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2.**
**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

**நீதித்துறை நடுவர் எண்-2.**
**பொள்ளாச்சி.**